

நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு திருச்சிராப்பள்ளி மாநகராட்சி எடமலைப்பட்டிபுதூர் ராஜீவ்காந்தி நகரில் ரூபாய் 18.41 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டு வரும் உயர்நிலைப்பள்ளியில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளை நேற்று முன்தினம் (28.05.2025) நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் மா.பிரதீப் குமார், மாநகராட்சி மேயர் மு.அன்பழகன், மாநகராட்சி ஆணையர் வே.சரவணன், நகரப் பொறியாளர் சிவபாதம், மண்டலத்தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மாநகராட்சி அலுவலர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### மதுரையில் நடைபெறும் முதலமைச்சர், கழகத் தலைவர் தலைமையில்

# ஜூன் 1 அன்று பொதுக்குழு கூட்டத்தில் கடலூர் கிழக்கு மாவட்டத்தினர் பங்கேற்பீர்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் வேண்டுகோள்!



கடலூர் மே 30 -

கடலூர் கிழக்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு: -

தமிழ்நாடு முதலமைச்சர், கழக தலைவர் அண்ணன் தளபதி அவர்களின் தலைமையில் ஜூன் 1.6.2026 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 9.00 மணியளவில் மதுரை, உத்தங்குடி, "கலைஞர் திடலில்" நடைபெறவிருக்கும் பொதுக்குழு கூட்டத்தில் கடலூர் கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த மாநில, மாவட்ட, மாநகர கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள்,

மாவட்ட, மாநகர இளைஞரணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாவட்ட, மாநகர கழக சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் பொதுக்குழு, சிறப்பு அழைப்பாளர்கள் அனைவரும் தங்களுக்கு தலைமைக் கழகத்தில் இருந்து அனுப்பப்பட்ட கடிதத்தினை எடுத்து வந்து நமது மாவட்டத்தின் பெயர் பொறித்துள்ள கவுண்டரில் வைத்துள்ள 'மினிட்' புத்தகத்தில் கையொப்பமிட்டு தங்களுக்குண்டான 'பேட்ஜ்'ஐ பெற்றுக் கொண்டு, காலை 8.00 மணிக்குள் பொதுக்குழு நடைபெறும் கூட்ட அரங்கத்திற்குள் நமது கடலூர் கிழக்கு மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் அமர்ந்திட வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

### ஞான.இமையநாதன் தலைமை ! என்.இளையராஜா முன்னிலை!

# மயிலாடுதுறை மத்திய ஒன்றியத்தில் தே.மு.தி.க.வினர் 50 பேர் கழகத்தில் இணைந்தனர்!

## மாவட்டக் கழகச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ. முன்னிலையில்!

மயிலாடுதுறை, மே 30 -

மயிலாடுதுறை . மாவட்டம் மயிலாடுதுறை மத்திய ஒன்றிய கழக செயலாளர் ஞான.இமயநாதன் ஏற்பாட்டில் திருஇந்தளூர் ஊராட்சியைச் சேர்ந்த தே.மு.தி.க. முன்னாள் ஒன்றிய செயலாளர் கலாநிதித லைமையில் 50 பேர் தேமுதிகவில் இருந்து விலகி கழகத்தில் இணையும் நிகழ்ச்சி மயிலாடுதுறையில் கலைஞர் அரங்கில் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு மயிலாடுதுறை மத்திய ஒன்றிய கழக செயலாளர் ஞான. இமயநாதன் தலைமை தாங்கினார்.

மாநில இளைஞரணி துணை செயலாளர் தாட்கோ தலைவர் என். இளையராஜா முன்னிலை வகித்தார். நிகழ்ச்சியில் மயிலாடுதுறை மாவட்ட கழக செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன் முன்னிலையில் திருஇந்தளூர் ஊராட்சியைச் சேர்ந்த தேமுதிக முன்னாள் ஒன்றிய செயலாளர் கலாநிதி தலைமையில் 50 பேர் தேமுதிகவில் இருந்து விலகி திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைத்துக் கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் கழக இளைஞரணி துணை செயலாளர் தாட்கோ தலைவர் என்.இளையராஜா, மாநில விவசாய அணி இணைச் செயலாளர் ஆர்.. அருள்செல்வன், மாவட்ட கழக அவைத் தலைவர் கே.ஜி.சீனிவாசன், மாவட்ட கழக துணை செயலாளர் எஸ. செல்வமணி,குத்தாலம் மேற்கு ஒன்றிய செயலாளர் ஏ.ஆர்.ராஜா, மயிலாடுதுறை நகர கழக செயலாளர் குண்டாமணி (எ) என்.செல்வராஜ் , மாவட்ட கழக துணை செயலாளர் சி.செல்வமணி, ஒன்றிய கழக செயலாளர் ஏ.ஆர். ராஜா , பேரூர் கழக செயலாளர் அண்ணாதுரை, பொதுக்குழு உறுப்பினர்கள் ஜெ.கபிலன், எஸ்.சங்கரநாரயணன், காந்தி, மாவட்ட கழக பிரதிநிதிகள் எஸ்.சுரேஷ், கொள்ளிடம் ராஜா, மாவட்ட சார்பு அணி நிர்வாகிகள் எம்.கே மருது .மற்றும் ஒன்றிய கழக நிர்வாகிகள் கிளைக் கழக நிர்வாகிகள் உள்ளாட்சி அமைப்புகளில் முன்னாள் பிரதிநிதிகள் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### நாமக்கல் கிழக்கு மாவட்டம் –

# இராசிபுரம், பிள்ளாநல்லூரில் இளைஞர் அணி பொறுப்புகளுக்கு விண்ணப்பங்கள்!

## சுப்பிரமணியம் தலைமையில் – மா.கார்த்திக் பெற்றுக் கொண்டார்!

நாமக்கல், மே 30 -


நாமக்கல் கிழக்கு மாவட்டம் பிள்ளாநல்லூர் பேரூர் திமுக இளைஞரணி சார்பாக பிள்ளாநல்லூர் பேரூராட்சியில் 15 வார்டுகளுக்கு உட்பட்ட வார்டு இளைஞர் அணி அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர் பொறுப்புகளுக்கு விண்ணப்பம் அளித்த 45 நபர்களையும் பேரூர் செயலாளர் சுப்ரமணி யம் தலைமையில் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் மா.கார்த்திக் சந்தித்து விண்ணப்பங்களை பெற்று கொண்டார்.

இந்நிகழ்வில் மாவட்ட வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர் கண்ணன், பேரூர் இளைஞர் அணி அமைப்பாளர் சுரேஷ், பேரூர் இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் நித்தியா னந்தம், மாரிமுத்து, இளையராஜா, தீபன் சக்கரவர்த்தி உட்பட வார்டு கழகச் செயலாளர்கள், பேரூராட்சி மன்ற உறுப்பி னர்கள், வார்டு இளைஞரணி நிர்வாகிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

இதேபோல் இராசிபுரம் நகர திமுக இளைஞரணி சார்பாக இராசிபுரம் நகரத்தில் 27 வார்டுக்கு உட்பட்ட வார்டு இளைஞர் அணி அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர் பொறுப்புகளுக்கு விண்ணப்பங்கள் அளித்த 108 நபர்களையும் மாவட்ட பொருளாளரும் இராசிபுரம் சட்டமன்ற தொகுதி பொறுப்பாளருமான ஏ.கே.பாலச்சந்தர், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் மா. கார்த்திக் ஆகியோர் சந்தித்து விண்ணப்பங்களை பெற்றுக் கொண்டனர்.

இந்நிகழ்வில் நகர பொருளாளர் அன்சர், நகர இளைஞரணி அமைப்பாளர் யோகராஜன் மற்றும் நகர இளைஞரணி துணை அமைப்பாளர்கள் பாண்டியன், லவக்குமார், மணிகண்டன், தினேஷ், தன்ராஜ், ராஜேஷ்,ரகுபதி, ரியாஸ் உட்பட வார்டு இளைஞரணி நிர்வாகிகள் பலரும் கலந்து கொண்டனர்.

நாமக்கல் கிழக்கு மாவட்டம் ராசிபுரம் நகரம் மற்றும் பிள்ளாநல்லூர் பேரூரில் வார்டு இளைஞர் அணி அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர் பொறுப்புகளுக்கு விண்ணப்பம் அளித்த 150 நபர்களையும் மாவட்ட பொருளாளரும் இராசிபுரம் சட்டமன்ற தொகுதி பொறுப்பாளருமான ஏ.கே.பாலச்சந்தர், பேரூர் செயலாளர் அ. சுப்ரமணியம், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் மா.கார்த்திக் ஆகியோர் விண்ணப்பங்களை பெற்று கொண்டனர். இந்நிகழ்ச்சியில் நகர, பேரூர் இளைஞர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.





தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நலவாரியம் மற்றும் பிற அமைப்புசாராத் தொழிலாளர்கள் நல வாரியங்களில் பதிவு பெற்ற தொழிலாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி ஈரோட்டில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி மற்றும் வாரியத் தலைவர் பொன்குமார் ஆகியோர் நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்புரையாற்றினர்.

# 4142 கட்டுமானத் தொழிலாளர்களுக்கு ரூ.5.75 கோடி உதவித் தொகை!

## ஈரோட்டில் அமைச்சர் சு.முத்துசாமி – வாரியத் தலைவர் பொன்குமார் வழங்கினர்!

ஈரோடு, மே 30 -

தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நலவாரியம் மற்றும் பிற அமைப்புசாராத் தொழிலாளர்கள் நல வாரியங்களில் பதிவு பெற்ற தொழிலாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி ஈரோட்டில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் வீட்டுவசதி, முதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி மற்றும் வாரியத் தலைவர் பொன்குமார் ஆகியோர் நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்புரையாற்றினர்.

கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம் உள்ளிட்ட அமைப்புசாராத் தொழிலாளர் நல வாரியங்களில் பதிவு செய்து கொள்ளும் தொழிலாளர்களுக்கு பிறப்பு முதல் இறப்பு வரை பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. கட்டுமானத் தொழிலாளர்கள் பணியிடத்திலிருந்து இறந்து போனால் 8 லட்சம் ரூபாய் அந்த குடும்பத்திற்கு வழங்கப்படுகிறது. வீடு இல்லாத கட்டுமானத் தொழிலாளர்களுக்கு வீடு கட்டிக் கொள்வதற்கு 4 லட்சம் ரூபாய் இலவசமாக வழங்கப்படுகிறது. 60 வயதில் ஓய்வூதியம் வழங்கப்படுகிறது.

திருமணத்திற்கு உதவி, பேறுகால உதவி, பிள்ளைகள் படிப்பதற்கான கல்வி உதவி என பல்வேறு உதவிகள் வாரியத்தின் மூலம் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

கடந்த 10 ஆண்டுகால அதிமுக ஆட்சியில் ஒரு திட்டத்தினுடைய பணப் பயனும் உயர்த்தப்படவில்லை. எந்த புதிய திட்டமும் அறிவிக்கப்படவில்லை. ஆனால் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சி அனைத்துத் திட்டப் பணப்பயன்களும் இரட்டிப்பாக உயர்த்தியதோடு 8 புதிய திட்டங்களையும் அறிவித்துள்ளது. அனைத்து பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளர்களுக்கு முழு மருத்துவ பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு அவர்களுக்கு மருத்துவ அட்டை வழங்கக்கூடிய அரிய திட்டம் முதல்வரால் அறிவிக்கப்பட்டுள்ளது. அதேபோல 60 வயது கடந்த, பிள்ளைகளால் உற்றார் உறவினர்களால் கைவிடப்பட்ட கட்டுமானத் தொழிலாளர்களுக்கு முதியோர் இல்லம் தொடங்குவதற்கும் முதலமைச்சரால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்படிப்பட்ட திட்டத்தின் பலன்களைத் தொழிலாளர் களுக்கு உடனடியாக கொண்டு சேர்க்க வேண்டும் என்ற முதலமைச்சர் எண்ணத்திற்கு ஏற்ப நலவாரிய பணிகள் முடுக்கி விடப்பட்டு தற்போது செயல்பட்டு வருகிறது. அதனுடைய பலனாக நான்காண்டு காலத்தில் சுமார் 20 லட்சம் தொழிலாளர்கள் நல வாரியத்தில் புதிதாக பதிவு செய்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

அந்த அடிப்படையில் ஈரோடு மாவட்டத்தை சேர்ந்த பதிவு பெற்ற தொழிலாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கக் கூடிய நிகழ்ச்சி 27.5.2025 அன்று ஈரோட்டில் நடைபெற்றது. மாவட்ட ஆட்சியர் ராஜகோபால்சுன்கரா இ.ஆ.ப அவர்கள் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வீட்டுவசதி, முதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி மற்றும் கட்டுமானத் தொழிலாளர்கள் நலவாரிய தலைவர் பொன்குமார் ஆகியோர் தொழிலாளருக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்புரையாற்றினர்.

இந்த நிகழ்ச்சியில் 4142 தொழிலாளர்களுக்கு 5,75,70,200 கோடி ரூபாய் அளவு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன. நிகழ்ச்சியில் தொழிலாளர் இணை ஆணையர் பா. மாதவன் அவர்கள் வரவேற்று பேசினார். கட்டுமானத் தொழிலாளர் நல வாரிய செயலாளர் க. ஜெயபாலன் அவர்கள் திட்டம் குறித்து விளக்க உரையாற்றினர். அந்தியூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஜி.வெங்கடாச்சலம், ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், ஈரோடு மாநகராட்சி துணை மேயர் வே.செல்வராஜ் உட்பட பலர் கலந்து கொண்டனர். தொழிலாளர் உதவி ஆணையர் முனைவர். த.முருகேசன் (ச.பா.தி) நன்றி கூறினார்.





தி.மு.க. சட்டத்துறை சார்பில் உதகையில் நீலகிரி மாவட்ட தி.மு.க. வழக்கறிஞர் அணி சார்பில், மாநில சட்டத்துறை செயலாளர் என்.ஆர்.இளங்கோ எம்.பி., தலைமையில் 2026 தேர்தல் பணிகள் குறித்த பயிற்சி பட்டறை உதகை மொனார்க் ஹோட்டலில் நடைபெற்றது. மாவட்ட அமைப்பாளர் வழக்கறிஞர் சிவசுப்ரமணியம் வரவேற்றார். மாவட்ட பொறுப்பு அமைச்சர் மு.பெ.சாமிநாதன், மாவட்ட கழக பொறுப்பாளர் கே.எம்.ராஜ்6, கழக உயர்நிலை செயல்திட்டகுழு உறுப்பினர் பா.மு.முபாரக், தேர்தல் பணி செயலாளர் அரசு தலைமை கொறடா கா.ராமச்சந்திரன் ஆகியோர் மற்றும் மாநில சட்டத்துறை துணை செயலாளர் சரவணன், சட்டமன்ற தொகுதி பார்வையாளர்கள் பரமேஷ்குமார், தென்றல் செல்வராஜ், திராவிடமணி, மாவட்ட வழக்கறிஞர் அணி நிர்வாகிகள் சந்திரபோஸ், குயிலரசன், மணிக்குமார், கிருஷ்ணகுமார், செந்தில்குமார், ஸ்ரீஜேஷ், கீர்த்தனா ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் மாவட்ட கழக நிர்வாகிகள், மாநில நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், நகரஒன்றியபேரூர் கழக செயலாளர்கள், கழக வழக்கறிஞர்கள் திரளாக கலந்து கொண்டனர்.





தலைமைக் கழக ஒப்புதலுடன் நியமிக்கப்பட்ட கோவை தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக இளைஞர் அணி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் அறிமுகக் கூட்டம் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கே.வி.கே.எஸ்.சபரி கார்த்திகேயன் வரவேற்புரையில் கழக இளைஞர் அணி துணை செயலாளர், ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், பேரூர் கழக செயலாளர் ராசு (எ) முத்துக்குமார், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் மணிமாறன் தென்றல், ச.புவனேஷ், வி.ஆர்.நிஷாந்த், கே.சபரிகிருஷ்ணன், சல்மான் நாசர், இருகூர் உதயபூபதி, திருமலைராஜா ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் தளபதி முருகேசன், சூர்யா கிருஷ்ணமூர்த்தி, ஊடகவியலாளர் இந்திரா தேரடி ஆகியோர் ஆலோசனைகளை வழங்கி சிறப்புரையாற்றினர். இதில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கே.ஈஸ்வரசாமி பொள்ளாச்சி, கணபதி ராஜ்குமார் கோவை, உள்பட தலைமைக் கழக, மாவட்டக் கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள், புதிதாக நியமிக்கப்பட்ட பகுதி இளைஞர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.





தலைமைக் கழக ஒப்புதலுடன் நியமிக்கப்பட்ட கோவை வடக்கு மாவட்டத்திற்குட்பட்ட ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக இளைஞர் அணி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் அறிமுகக் கூட்டம் மாவட்ட அமைப்பாளர் எம்.ஏ.ஆர்.கே.ஹக்கீம் வரவேற்புரையில் கழக இளைஞர் அணி துணைச் செயலாளர், ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், கூடலூர் நகர கழக செயலாளர் அ.அறிவரசு, மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் வே.சூரியன் தம்பி, எம்.மனோஜ்குமார், உதயநிதி பாபு, கே.நாகராஜ், பா.விக்னேஷ்குமார் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி, ஊடகவியலாளர் சூரியா கிருஷ்ணமூர்த்தி, கழக தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் அழகிரி சதாசிவம் ஆகியோர் ஆலோசனைகளை வழங்கி சிறப்புரையாற்றினர். இதில் கோவை நாடாளுமன்ற உறுப்பினர் கணபதி பா.ராஜ்குமார் உள்பட மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைக் கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள், புதிதாக நியமிக்கப்பட்ட இளைஞர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.